## தொழிலாளர் நீதிமன்றம், உதகமண்டலம்

C.P.No.1/2026 தொ.சா.1–திரு.R.செந்தில்குமார் நாள்: 12.06.2026

சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் நான் 2011 ஆம் ஆண்டு ஆப்ரேட்டராக பணிக்கு சேர்ந்தேன். நான் இரண்டரை வருடம் அதன் பிறகு அங்கு Trainee ஆக இருந்தேன் என்பது சரி. 2018–ஆம் ஆண்டில் நான் மாதம் ரூ. 23,000/–ம் அங்கு சம்பளம் பெற்று வந்தேன். 2018–ஆம் ஆண்டில் மாசு கட்டுபாட்டு வாரிய அதிகாரி அந்த தொழிற்சாலையில் பார்வையிட்டு ஆய்வு செய்த விவரம் எனக்கு தெரியும் என்பது சரி. அதன் பிறகு நிர்வாகம் 22.06.2018 தேதியிட்டு கடிதம் ஒன்றை மேற்படி மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அனுப்பி அதன் நிபந்தனைகளை நிறைவேற்ற கால அவகாசம் கோரி இருந்தது என்பது சரி. மாசு கட்டுப்பாட்டு வாரியம் அறிவுறுத்திய Zero discharge plant என்பது தமிழ்நாடு உட்பட இந்தியாவின் எந்தவொரு மாநிலத்திலும் அமைக்கப்படவில்லை என்றால் தவறு. அவ்வாறு Plant அமைக்க எந்த அவகாசமும் நிர்வாகத்திற்கு வழங்காமல் மின்வாரியம் 28.06.2018 அன்று தொழிற்சாலை மின்இணைப்பு துண்டித்துவிட்டது என்றால் அவ்வாறு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது என்பது சரி, ஆனால் அந்த Plant அமைக்க நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 28.06.2018 அன்றே எதிர்மனுதாரர் நிர்வாகம் எந்தவொரு உற்பத்தி மேற்கொள்ளக்கூடாது என்று மாசு கட்டுப்பாட்டு வாரியமும் அந்த தொழிற்சாலைக்கு சீல் வைத்தது என்றால் இல்லை. 28.06.2018 முதல் எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் எந்தவொரு உற்பத்தியும் மேற்கொள்ளப்படவில்லை என்றால் நிர்வாகம் எந்தவொரு

R. Senthil Kumar.
12-6-26.

12/6/26

பணியும் தொழிலாளருக்கு அந்த தேதியில் இருந்து வழங்கவில்லை. மேற்படி தேதி முதல் தொழிலாளர்கள் எந்தவொரு பணியும் மேற்கொள்ளவில்லை என்றும் அலுவலகப் பணியாளர்கள் மட்டுமே பணி செய்து வந்தார்கள் என்றும் என் முதல் விசாரணைக்கான நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் தவறு. என் முதல் விசாரணைக்கான நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் மாசு கட்டுப்பாட்டு வாரியம் எதிர்மனுதாரர் தொழிற்சாலைக்கு சீல் வைத்த பிறகும், மின்வாரியம் மின்இணைப்பு துண்டித்தபிறகும், தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டிய ஊதியத்தை நிர்வாகம் சட்டவிரோதமாக 50% சதவீதத்தை வழங்காமல் இருந்தது என்று குறிப்பிட்டுள்ளதை பொறுத்து தொழிற்தாவா எங்கள் சங்கத்தின் மூலம் எழுப்பினோமா என்றால் எழுப்பினோம்.

எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு தேவையான மூலப்பொருட்கள் இல்லை என்று குறிப்பிட்டோ அல்லது தொழிற்சாலை நஷ்டத்தில் இயங்குகிறது என்று குறிப்பிட்டோ எதிர்மனுதாரர் நிர்வாகம் தொழிற்சாலை இயக்கத்தை நிறுத்தவில்லை. தொழிற்சாலை மின்இணைப்பு மொத்தமாக துண்டிக்கப்பட்டுவிட்டதாலும், மாசு கட்டுப்பாட்டு வாரியம் தொழிற்சாலைக்கு சீல் வைத்ததாலும் தான் எதிர்மனுதாரர் தொழிற்சாலை இயக்கப்பட முடியவில்லை என்றால் மின் இணைப்பு முழுவதுமாக துண்டிக்கப்படவில்லை, மாசு கட்டுப்பாட்டு வாரியமும் சீல் வைக்கவில்லை, Zero discharge Plant அமைக்கும் வரை உற்பத்தி செய்யக்கூடாது என்று மட்டுமே மாசு கட்டுப்பாட்டு வாரியம் நிறுத்தி வைத்திருந்தது.

12/6/26

R. Senthil Kumar.
12-6-26.

எதிர்மனுதாரர் நிர்வாகம் தங்கள் தொழிற்சாலையை Closure செய்ய அனுமதிக்க வேண்டி அரசாங்கத்திற்கு 15.02.2024 அன்று விண்ணப்பத்தது என்பது சரிதான். அந்த விண்ணப்பத்தின் பேரில் உதவி தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் நடந்த விசாரணையில் நாங்கள் எங்கள் சங்கம் மூலமாக முன்னிலை ஆனோம் என்பது சரி. அது சம்பந்தமாக 09.09.2024 வரை எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு Closure –க்கு அனுமதி வழங்கியோ அல்லது அதை மறுத்தோ தமிழக அரசு எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றால் தவறு. தமிழக அரசு எதிர்மனுதாரர் நிர்வாகம் தொழிற்சாலையை Closure செய்ய வேண்டியதை நிராகரித்து 09.09.2024 அன்று உத்தரவு பிறப்பித்தது என்பதும், அதன் நகல் எங்களுக்கும் கிடைத்து இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்பது சரி. 28.06.2018 முதலே தொழிற்சாலை இயங்காமல் இருந்து வருவதாக நிர்வாகம் அந்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தது என்பது சரி, ஆனால் அதை தமிழக அரசு நிராகரித்துவிட்டது.

எங்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையில் ஊதிய நிர்ணயம் குறித்து எந்தவொரு ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்பது சரி. 2018–ஆம் ஆண்டு காலகட்டத்தில் அமலில் இருந்த போனஸ் சட்டத்தின்படி அப்பொழுது மாதம் ரூ.21,000/–த்திற்கும் அதிகமாக சம்பளம் பெறுபவர்களுக்கு போனஸ் கிடையாது என்றால் தவறு, ரூ.21,000/–த்திற்கும் அதிகமாக மாதம் சம்பளம் பெற்றவர்களுக்கும் அப்பொழுது போனஸ் கொடுத்தார்கள். ஒரு கணக்கு ஆண்டில் குறைந்தது 30 நாட்கள் பணிபுரிந்து இருந்தால் தான் போனஸ் கிடைப்பதற்கான தகுதி ஏற்படும் என்பது சரி. 28.06.2018 தேதிக்கு பிறகு இன்றைய தேதி வரை எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் எந்தவொரு உற்பத்தி பணியும் மேற்கொள்ளப்படவில்லை என்பது சரி.

12/6/25

R. Senthil Kumar.
12-6-26.

அதன் காரணமாக எதிர்மனுதாரர் நிர்வாகம் மீது தேசிய கம்பெனிகள் தீர்ப்பாயத்தில் நொடிப்பு நிலை மனு ஒன்றை கடன் வழங்கிய வங்கிகள் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். அந்த மனு மீது ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரமும் எங்களுக்கு தெரியும் என்பது சரி. அந்த உத்தரவில் எதிர்மனுதாரர் நிர்வாகம் எவருக்கும் பணம் வழங்கக்கூடாது என்று ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது என்பது சரி.

28.06.2018 தேதியிலிருந்து நிர்வாகம் அதன் உற்பத்தியை நிறுத்திய விவரத்தையும், பணியாளர்களுக்கு வேலை வழங்க இயலவில்லை என்ற விவரத்தையும் உடனடியாக 12.07.2018 தேதியிலேயே அறிவிப்பு பலகையில் குறிப்பிட்டுவிட்டது என்றால் தவறு.

**(எதிர்மனுதாரர் தரப்பில் அவகாசம் வேண்டியதால் தொ.சா.1 குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்திவைக்கப்படுகிறது).**

R. Senthil Kumar
12-6-26.

Taken down by me in open court
read over./ interpreted to the
witness and acknowledged by
him/her to be correct.
12/6/26

Presiding Officer
Labour Court
Udhagamandalam